RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ஆவண இலக்கியத்தின் முன்னோடி இராஜம் கிருஷ்ணன்

**பொ. சுதாராணி** [அ, *]

[அ] தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம், அருள்மிகு பழனி ஆண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, சின்னக்கலையம்புத்தூர், பழனி, தமிழ்நாடு, இந்தியா.

# Rajam Krishnan, the pioneer of documentary literature

**P. Sudharani** [a, *]

[a] PG and Research Department of Tamil, Arulmigu Palaniandavar Arts college for women, Chinnakalaiyamputhur, Palani -624615, Tamil Nadu, India

*Corresponding Author:

Received: 16-12-2025
Revised: 01-03-2026
Accepted: 06-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

The writer Rajam Krishnan is a multifaceted personality: a fiction writer, essayist, social thinker, and critic. She has addressed various social issues as the backdrop for her works. She travelled with and interacted with diverse groups of people, including tribal communities, fishermen, agricultural labourers, child labourers, salt pan workers, and bandits, conducting field research and transforming her direct experiences into fiction, thereby creating significant ripples in society. She was a pioneer in bringing about social change. She documented the lives and struggles of the aforementioned marginalized people through her literary works. In this respect, she stands as a pioneer of documentary literature.

**Keywords:** Tribal people, Fishermen, Child laborers, Salt pan workers, Agricultural workers, Chambal Valley robbers.

## முன்னுரை

இலக்கியங்கள் மனித வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள். படைப்பாளிகள் தங்கள் புனைவுகளைப் படைக்கும் போது தங்கள் வாழ்வியல் அனுபவங்களைப் புனைவுகளாக ஆக்குவதும் முழுக்கக் கற்பனையாகப் படைப்பதும் உண்டு. தனக்கு அறிமுகமான அல்லது தன் அனுபவத்தை வாழ்கின்ற சூழலைப் புனைவாக்குவது இயல்பு. இதனைப் படைப்பாக்க உளவியல் என்கிறோம். தமிழில் தான் எழுதப்போகும் சமூகத்தைக் களஆய்வு செய்து ஆவண இலக்கியமாகப் படைக்கும் போக்கிற்கு வித்திட்டவர் இராஜம் கிருஷ்ணன் எனலாம். ஒரு படைப்பாளி சமூகப் பொறுப்புடன் இயங்க வேண்டும் என்பதற்கான சான்று இராஜம் கிருஷ்ணன் மேற்கொண்ட சமூகப் பிரச்சனைகள் குறித்த களஆய்வு ஆகும். புனைவு எழுத்தாளராக மட்டுமன்றி சமூகத்தைக் கள ஆய்வுக்கு உட்படுத்திய ஆழமான சமூக ஆய்வாளர். எனவே இராஜம் கிருஷ்ணனை ஆவண இலக்கியத்தின் முன்னோடி என்று அழைப்பது சாலப்பொருந்தும்.

## இராஜம் கிருஷ்ணனின் களஆய்வு முறையியல்

ஒரு களத்தை எழுத்து வடிவில் வாசகர் மனதில் காட்சிப்படுத்த அக்களம் குறித்த முழுமையான பார்வை இருத்தல் அவசியம். தனக்கு அறிமுகமான களத்தைப் புனைவாக்குவதிலும் புதிய களங்களைப் புனைவாக்குவதிலும் சவால்கள் அதிகம். அதற்குச் சரியான ஆய்வு முறையியல் பெருந்துணையாக நிற்கும். திட்டமிட்டு முறைப்படி செய்யப்படும் களஆய்வின் பலனை அப்படைப்பின் வெற்றியில் காணலாம்.

வெகுசன மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட குறிஞ்சித்தேன், கரிப்பு மணிகள், சேற்றில் மனிதர்கள், அலை வாய்க்கரை, முள்ளும் மலர்ந்தது, கூட்டுக்குஞ்சுகள் போன்ற இராஜம் கிருஷ்ணன் படைப்புகளின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது மிகச்சிறந்த கள ஆய்வு முறையே ஆகும்.

## பழங்குடி இன மக்களின் வாழ்வியல்

நவீனத்துவத்தால் ஏற்படும் சவால்களைச் சந்திக்கும் பழங்குடி இனமான நீலகிரி மலைப்பகுதிகளில் வாழும் படுகர் இன மக்களின் வாழ்வியலை மிக நுணுக்கமாக அழகாகப் பதிவு செய்த நாவல் குறிஞ்சித்தேன் ஆகும். மூன்று தலைமுறை மக்களின் வாழ்வியலை, அவர்களது சிந்தனைப் போக்கை, மனமாற்றங்களை மிகத் துல்லியமாக இந்நாவல் இராஜம் கிருஷ்ணன் பதிவு செய்துள்ளார். படுகர் இன மக்களின் வாழ்வியல், கலாச்சாரம், வழிபாடு, பண்பாடு, திருமணம், இறப்பு முதலான சடங்குகள், கலை, நம்பிக்கை, தொழில், பொருளாதார மாற்றம், மறைந்துபோன பயிர் முறைகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நேரில் கண்ட செய்திகளைத் திரட்டி ஆவணப்படுத்தியுள்ளார்.

## உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வியல்

ஒரு தேர்ந்த சமூகவியல் ஆய்வாளரின் உழைப்போடும் தீவிரத்தோடும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கரிப்பு மணிகள் ஆகும். அதுவே புதினமாக மலர்ந்தது. இராஜம் கிருஷ்ணன் மேற்கொண்ட இவ்வாய்வு சமூகத்தில் மிகப்பெரிய புரட்சியை உருவாக்கியது எனலாம். தூத்துக்குடி பகுதியில் கடும் வெயில், கூராய்க் கிழிக்கும் உப்பு நிறைந்த அளங்கள், நாவை வறட்டும் வறட்சி, உடலைப் புரட்டிப் போடும் சூழல், தொழிலாளர்களின் வாழ்வியல் போராட்டம், சுரண்டல், பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல் ஆகியவற்றை எதார்த்தமாக கள ஆய்வின் வழி இந்நாவலில் பதிவுச் செய்துள்ளார்.

உப்பு விளைவிக்கும் தொழிலில் உள்ள சவால்கள், கடினமான படிநிலைகளைத் தொழில்நுட்ப அறிவோடும் தொழில்சார் கலைச்சொற்களுடனும் துல்லியமாக இந்நாவல் பதிவு செய்துள்ளது.

## குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வியல்

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் வாழும் குழந்தைத் தொழிலாளர்களின் அவலங்களை ரத்தமும் கண்ணீருமாகப் பதிவு செய்த நாவல் கூட்டுக் குஞ்சுகள் ஆகும். தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணியாற்றும் சின்னஞ்சிறு பிஞ்சுகள் படும் வேதனைகள், சுரண்டல்கள் குறித்து அந்த குழந்தைத் தொழிலாளர்களுடன் நேரடியாக உரையாடி நேர்காணல் முறையில் சேகரித்த தரவுகளின் பரிணாமமே இந்நூல்.

முதலாளிகள் தரப்பில் எழுந்த பல்வேறு எதிர்ப்புகளையும் மீறி நச்சுப் பொருட்களைக் கையாளும் பிஞ்சு விரல்கள் எதிர்கொள்ளும் உடல்நலப் பிரச்சனைகள், சிதைக்கப்படும் அவர்களது எதிர்காலம், கனவு, ஆசை ஆகியன குறித்து குழந்தைகளுடன் நேரடியாக உரையாடிப் பெற்ற தரவுகளைக் கொண்டு இந்நாவலை இராஜம் கிருஷ்ணன் உருவாக்கியுள்ளார். வறுமை, கடன் சுமை காரணமாகத் தொடர் வேலை அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டு தங்கள் குழந்தைப் பருவத்தை இழந்து நிற்கும் சின்னஞ்சிறு குழந்தைகளின் இந்நிலைக்கு எதிரான ஒரு ஆவண அறிக்கையாகவே இந்நூல் பார்க்கப்படுகின்றது. இது தேசிய அளவில் பெரும் விவாதத்திற்கு உள்ளானது. ஒரு தேர்ந்த துணிச்சலான திறனாய்வாளரின் உழைப்பிற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

## சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்களின் வாழ்வியல்

பீகாரின் அடர்ந்த காட்டுப்பகுதியில் வாழும் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்களின் வாழ்வியலையும் அவர்களின் மறுவாழ்வையும் குறித்துப் பேசும் படைப்பு முள்ளும் மலர்ந்தது நாவலாகும். ஆபத்து நிறைந்த இடங்களில் துணிச்சலுடன் கள ஆய்வு மேற்கொண்டு கொள்ளையர்களின் மறுவாழ்விற்கு வித்திட்டது இந்நாவல். வினோபாவே ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகிய காந்தியவாதிகளின் உதவியுடன் கொள்ளையர்களை நேரடியாகச் சந்தித்து அவர்கள் எதிர்கொண்ட சாதியக் கொடுமைகள், நில அபகரிப்பு, காவல்துறை அதிகாரிகளின் அடக்குமுறைகள் ஆகியவற்றின் விளைவாக அவர்கள் தேர்ந்தெடுத்த பாதை, மனமாற்றம், வன்முறையானது சமூகச் சூழலால் உருவாக்கப்படும் விதம் ஆகியவற்றைப் பதிவு செய்த அற்புதமான படைப்பு. இது தமிழ் வாசகர்களிடையே மட்டுமன்றி இந்திய அளவிலும் பேசு பொருளாக அமைந்தது.

## வேளாண் தொழிலாளர்களின் வாழ்வியல்

தஞ்சை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் வாழும் வேளாண் தொழிலாளர்களின் இன்னல்களைப் பேசும் புதினம் இது. களப்பயணம் செய்து நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வியல் சவால்களை இராஜம் கிருஷ்ணன் பதிவு செய்துள்ளார். சமூக அக்கறை உடைய ஒரு திறனாய்வாளரின் பணிக்கு இது சான்றாகும். 1968ல் நடந்த கீழ்வெண்மணி நிகழ்வு

குறித்தும் அதனால் நிகழ்ந்த விளைவுகள், போராட்டங்கள், சிந்தனை மாற்றங்கள் குறித்தும் குறித்தும் இந்நூல் சுட்டிக் காட்டியுள்ளது.

## முடிவுரை

களஆய்வு செய்து ஆவணப்படுத்துவதில் முதன்மையானவராக இராஜம்கிருஷ்ணன் திகழ்கிறார். கள ஆய்வின் படிநிலைகள் அனைத்தும் இராஜம் கிருஷ்ணனின் படைப்புகளுக்குப் பொருந்தக் கூடியவையாகத் திகழ்கின்றன. படைப்பாளர்கள் தொடுவதற்கு அஞ்சக்கூடிய பழங்குடி மக்களின் வாழ்வியலை களத்தில் நின்று ஆய்ந்து உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவராக இராஜம்கிருஷ்ணன் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வியலை ஜனநாயகப்படுத்தியவராகத் தமிழ்ச்சமூகம் இவரைக் கொண்டாடுகின்றது. தடம் மாறியவர்களையும் நேரடியாகச் சந்தித்து அவர்களையும் பாதை மாற்றிய படைப்பாளர்களில் ஒருவராக இராஜம்கிருஷ்ணனை அவர்தம் படைப்புகள் அறிமுகப்படுத்தியுள்ளன.

## References


Balachandran S, Ilakkiya Thiranayvu, 2009, NCBH, Chennai.

Gnamoorthi T A, Ilakkiya Thiranayviyal, 2020, Pari Nilaiyam, Chennai.

Rajam Krishnan, Alaivay Karaiyile, 2019, Gowra Publication, Chennai.

Rajam Krishnan, Kaalam, 2024, Sekar Publication, Chennai.

Rajam Krishnan, Karippu Manikal, 2024, NCBH, Chennai.

Rajam Krishnan, Koottu Kunjukal, 2011, NCBH, Chennai.

Rajam Krishnan, Kurinchi Theen, 2019, Senbaga Publication, Chennai.

Rajam Krishnan, Setril Manitharkal, 2023, Senbaga Publication, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License